# இலங்கை பரீட்சைத் திணைக்களம்
## தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
## த.பெ.இ 1503, கொழும்பு

### க.பொ.த (சா.தர)ப் பரீட்சை
### ஆங்கில மொழிமூல விடைத்தாள் மதிப்பீடு தொடர்பாக குழுவொன்றை நியமித்தல்

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த (சா.தர)ப் பரீட்சையின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுங்களின் ஆங்கில மொழிமூல விடைத்தாள் மதிப்பீட்டுக் கடமைகளுக்காக பரீட்சகர் குழுவொன்றினை நியமிப்பதற்காக இப்பாடங்கள் தொடர்பில் தேர்ச்சியுடைய பொருத்தமான தற்பொழுது அரச மற்றும் பகுதி அரச பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களிடம் இருந்தும் மதிப்பீட்டு கடமைகளில் அனுபவம் உள்ள 2015.01.01 ஆம் திகதிக்கு பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இம்மதிப்பீட்டுப் பணிகள் யாவும் கொழும்பில் நடைபெறும்.

**பாடங்கள்**

- 11 – பௌத்த சமயம்
- 14 – கத்தோலிக்க சமயம்
- 15 – கிறிஸ்தவம்
- 16 - இஸ்லாம்
- 32 – கணிதம்
- 33 – வரலாறு
- 34 – விஞ்ஞானம்
- 41 – சங்கீதம் (மேலைத்தேய)
- 43 – சித்திரம்
- 85 – மனைப்பொருளியல்
- தொழினுட்பப் பாடங்கள்

**தகைமைகள்**

01. அரச மற்றும் பகுதி அரச பாடசாலைகளில் கா.பொ.த (சா.த/உ.த) இற்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களை ஆங்கிலமொழி மூலத்தில் 5 வருடங்கள் கற்பித்த அனுபவம் கொண்டவர்கள்.
02. ஆங்கிலமொழி மூலத்தில் விடைத்தாள் மதிப்பீட்டு செய்வதற்கான ஆற்றல் உள்ளவர்கள் (சான்றுகளின் பிரதிகளை இணைக்கவும்)
03. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம் க.பொ.த (சா.த/உ.த) மதிப்பீட்டுக் கடமைகளில் ஈடுபட்டிருத்தல் விசேட தகைமையாக கருதப்படும்.
04. தகைமைகளை பரிசீலித்த பின் சேவையின் அவசியத் தன்மையைப் பொறுத்து கருத்தில் கொள்ளப்படும்.

விண்ணப்பப்படிவத்தை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தளமான www.doenets,lk இல் இருந்து பதிவிறக்கி பிழையின்றி பூரணப்படுத்தி 2019 ஜனவரி 07 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்பதாகவோ, பரீட்சை ஆணையாளர் நாயகம், மதிப்பீட்டுக் (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல. 1503, கொழும்பு. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

B. சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்